செ.வெ.எண்: 10 நாள்: 05.07.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் சுமார் ரூ.67.14 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் வளர்ச்சிப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சிப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (05.07.2016) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பல்வேறு வளர்ச்சிப்பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், வாகவாசல் ஊராட்சி, வாகவாசலில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.17 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கிராம சேவை மையம் கட்டிட கட்டுமானப்பணியையும், திடக்கழிவு மேலாண்மை குழியில் குப்பைகளை பிரிக்கும் பணியையும், தட்டாம்பட்டி கோவில் ஊரணியில் நட்டு வளர்த்து பராமரிக்கப்பட்டு வரும் மரக்கன்றுகள், தட்டாங்குளத்தில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.4,86,900 மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் குளம் தூர்வாறும் பணியையும், புத்தாம்பூர் ஊராட்சி, புத்தாம்பூரில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ ரூ.17 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கிராம சேவை மையம் கட்டிட கட்டுமானப்பணியையும் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.



புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் வாகவாசல் ஊராட்சி, தட்டாம்பட்டி கோவில் ஊரணியில் நட்டு வளர்த்து பராமரிக்கப்பட்டு வரும் மரக்கன்றுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (05.07.2016) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும் பெருங்கொண்டான் விடுதி ஊராட்சி, மாந்தாங்குடியில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.15.99 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட நாற்றங்கால் பணியையும், ஒருங்கிணைந்த சமுதாய பசுமை சுகாதார வளாகத்தின் செயல்பாட்டினையும், குப்பையன்பட்டி ஊராட்சி, குப்பையன்பட்டி பழத்தோட்டத்தில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.12.29 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட நாற்றங்கால் பணியையும் என மொத்தம் ரூ.67,14,900 மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சிப்பணிகள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஆய்வின் போது சுகாதார வளாகத்தினை அனைவரும் தினமும் பயன்படுத்தவும், குளங்களில் நடப்பட்டுள்ள மரக்கன்றுகளை தினமும் நீர் ஊற்றி பராமரிப்பதுடன், மரக்கன்றுகள் வளர்வதற்கு இடையூராக இருக்கும் தேவையற்ற செடிகளை அகற்றவும், திடக்கழிவு குழிகளில் மக்கும் குப்பை, மக்காத குப்பைகளை தனித்தனியாக பிரித்து சேமிக்கவும், நாற்றங்கால்களில் மரக்கன்றுகளை உரிய

முறையில் நடவு செய்து பராமரித்து வளர்க்கவும், முடிவுற்ற பணிகளை உரிய முறையில் பராமரிக்கவும், மேலும் நடைபெறும் பணிகளை தரமான கட்டுமானப்பொருட்களை கொண்டு விரைவாக கட்டிமுடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

..2..



பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் புத்தாம்பூர் அரசினர் மேல்நிலைப்பள்ளி, பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி, மாந்தாங்குடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி ஆகிய இடங்களை பார்வையிட்டு மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்பட்டு வரும் உணவினை சாப்பிட்டு ஆய்வு செய்தார். மேலும் மாணவ, மாணவிகளின் கல்வி தரத்தை ஆய்வு செய்து அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் சிறப்பான கல்வியை வழங்க ஆசிரியர்களுக்கு உத்தரவிட்டதுடன் மாணவர்களும் ஆசிரியர்கள் கூறும் பாடங்களை தினமும் படித்து சிறப்பாக கல்வி கற்று வாழ்வில் முன்னேற வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் போது வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.மதியழகன், திரு.தமிழ்செல்வன், உதவிப்பொறியாளர் திருமதி.லெட்சுமி, ஒன்றியப்பணி மேற்பார்வையாளர்கள் திருமதி.சுமதி, திரு.முத்துக்குமார், ஊராட்சி மன்றத்தலைவர்கள் திரு.அப்துல்வஹாப், திரு.துரைகுமரப்பன் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**